**Series ΣHEFG**

**SET ~ 4**

प्रश्न-पत्र कोड
Q.P. Code **6**

रोल नं.
Roll No.

परीक्षार्थी प्रश्न-पत्र कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப் பெற்ற **15** பக்கங்கள் உள்ளதைச் சரி ^ பாரார்க்கவும்.
- வினாத்தாளின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை **(Code No.)** விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்
- **இந்த வினாத்தாளில் 14 வினாக்கள் உள்ளனவா எனச் சரி பார்க்கவும்.**
- எழுதத் தொடங்குவதற்கு முன் வரிசை எண்ணைக் கு றிப்பிடவும்.
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந் நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **15** printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **14** questions.
- **Please write down the Serial Number of the question in the answer-book before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

கால அளவு : **3** மணி | மொ. மதிப்பெண்கள் : **80**

Time allowed : **3** hours | Maximum Marks : **80**

## General Instructions :

*பொதுவான வழிமுறைகள் :*

1. This question paper contains **TWO** Sections.
   *இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.*
2. **Section A :** Contains **8** Questions.
   *பிரிவு அ – 8 வினாக்களைக் கொண்டுள்ளது.*
3. **Section B :** Contains **6** Questions.
   *பிரிவு ஆ – 6 வினாக்களைக் கொண்டுள்ளது.*
4. Attempt as per specific instructions for each Question.
   *ஒவ்வொரு வினாக்களின் தலைப்புகளிலும் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*
5. Please write down the serial no. of the question in the answer book before attempting it.
   *பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.*

*பகுதி – அ* **மதிப்பெண் : 40**

1. *(அ) கீழ்க்காணும் பத்தியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :* **5 × 1 = 5**

*மூன்று வயது குழந்தை ஒன்றை அம்மை நோய் தாக்கியது. நோயின் தாக்கத்தால் அக்குழந்தை கண்ணொளி இழந்தது. குழந்தையின் நிலை கண்ட பெற்றோர் கலங்கினர்; குழந்தையின் எதிர்காலத்தை நினைத்து அழுதனர். ஆண்டுகள் உருண்டோடின. குழந்தைக்கு 5 வயதானது. தொடக்கத் கல்வியைக் கற்பிக்க எண்ணினார் குழந்தையின் தந்தை. முத்தையா குழந்தையைத் தன் மடியில் குப்புறப் படுக்க வைத்து அதன் முதுகில் தமிழ் எழுத்துக்களை எழுதிக் கற்பித்தார். தந்தையின் மடியே குழந்தையின் தொடக்கப்பள்ளி ஆனது.*

குழந்தைக்கு எட்டு வயது ஆனபோது மாரிமுத்துக் கவிராயரிடம் குழந்தைக்குக் கல்வி கற்பிக்க வேண்டினார் தந்தை. இலக்கண இலக்கியங்களைக் கேட்டுக் கற்று கவி ஆற்றலும் தமிழாற்றலும் பெற்றது குழந்தை. அதன் விளைவாகத் தன் 17ஆம் வயதில் பழனிபதிகம், குமரகுரு பதிகம், சிவகிரி பதிகம் என நற்றமிழ் இலக்கியங்களைப் படைத்துத் தமிழன்னைக்கு அணி சேர்த்தது அக்குழந்தை. பழனி என்னும் இயற்பெயர் கொண்ட அக்குழந்தையைத் தான் மாம்பழக் கவிச் சிங்க நாவலர் எனப் பாராட்டிப் போற்றியது தமிழுலகம்.

வினாக்கள் :

I. முத்தையா யார்?

(அ) குழந்தையின் தந்தை (ஆ) குழந்தையின் தாய்

(இ) ஆசிரியர் (ஈ) குழந்தை

II. குழந்தை இழந்த உறுப்பு எது?

(அ) காது (ஆ) மூக்கு

(இ) வாய் (ஈ) கண்

III. மாரிமுத்துக் கவிராயரிடம் கற்றவை எவை?

(அ) இலக்கணம் (ஆ) இலக்கியம்

(இ) இலக்கண இலக்கியம் (ஈ) எதுவும் இல்லை

IV. மாம்பழக் கவிச்சிங்க நாவலர் எழுதிய நூல் எது?

(அ) சிவகிரி பதிகம் (ஆ) சிவக்கொழுந்து பதிகம்

(இ) சிவபதம் (ஈ) சிவகிரிப் பாட்டு

V. குழந்தையன் தொடக்கப்பள்ளி எது?

(அ) அன்னையின் மடி (ஆ) தந்தையின் மடி

(இ) வீட்டின் மாரி (ஈ) மாடி

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் பத்தியைத் தொடர்ந்து அமைந்துள்ள வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக : **5 × 1 = 5**

உலக மக்களிடையே பல பிரிவுகளும் பிளவுகளும் இருத்தல் இயற்கை. இயற்கை அமைத்த மலை, ஆறு முதலியவற்றால் ஏற்படும் பிரிவுகளும் ஆங்காங்கே வழங்கும் மொழிகளால் ஏற்படும் பிரிவுகளும் இயற்கையானவை. பிறப்பை ஒட்டிய சாதி வேறுபாடுகளாலும் சடங்குகளையொட்டிய சமய வேறுபாடுகளாலும் ஏற்படும் பிளவுகள் செயற்கையானவை.

தமிழகத்தில் மூன்று நாடுகளை ஆண்ட மூவேந்தர்களின் பகைமையாலும் பூசலாலும் இயற்கைப் பிரிவுகள் செயற்கைப் பிரிவுகளாய்த் தீமை விளைத்தலைக் கண்டார் தமிழ்ச் சான்றோர் இளங்கோவடிகள். ஆட்சியால் தமிழகம் மூன்றாகப் பிரிந்திரிந்தாலும், பண்பாட்டால், மொழி வகையால் தமிழர் என்று ஓர் இனம் வாழும் நாடே, தமிழகம் என்ற ஒற்றுமையைக் கொள்கையால் வலியுறுத்தினார். அதனால் முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரிய ஒரு காவியத்தைத் தமிழகத்தின் பொதுக்காவியமாகவே ஆக்கித் தந்துள்ளார். தமிழகத்தின் பொதுக்காவியமாகவே ஆக்கித் தந்துள்ளார். தமிழகத்தின் ஒற்றுமைக்கு வித்திட்ட தமிழ்சான்றோர் இளங்கோவடிகள் ஆவார்.

வினாக்கள் :

I. இயற்கைப் பிரிவுகள் செயற்கைப் பிரிவுகளாதலைக் கண்டவர்.

(அ) சான்றோர் (ஆ) தமிழர்

(இ) மன்னர் (ஈ) இளங்கோவடிகள்

II. பிறப்பை ஒட்டிய வேறுபாடு எது ?

(அ) சமயம் (ஆ) சாதி

(இ) பிளவு (ஈ) பிரிவு

III. பிளவுகளும் பிரிவுகளும்

(அ) இயற்கை (ஆ) செயற்கை

(இ) முறை (ஈ) உண்மை

IV. மூன்று நாடுகளை ஆண்டோர்

(அ) மூவேந்தர் (ஆ) மன்னர்

(இ) அரசர் (ஈ) கோ

V. இளங்கோவின் கொள்கை

(அ) விழிப்புணர்வு (ஆ) தாய்மொழி போற்றல்

(இ) சாதி மறுப்பு (ஈ) ஒற்றுமை

2. பின்வரும் பத்தியைப் படித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **5 × 1 = 5**

இந்தியாவின் கடைக்கோடி தென்முனை, மூன்று கடல்களும் சங்கமிக்கும் கன்னியாகுமரி. கடலுக்கு நடுவே இருக்கும் விவேகானந்தர் பாறையைச் சுற்றி நிறைய கடைகள். அங்கு வெண் சங்குகள், வரிச் சங்குகள், சிறிய சிப்பிகள் சோழிகள் போன்றவையும் இவற்றால் செய்யப்பட்ட அலங்காரப் பொருள்களும் விற்பதைக் காணலாம்.

அக்கடைகளில் நாம் வாங்கும் சங்குசிப்பிகளின் உள்ளே எதுவும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அது பிடிபட்ட தினத்தில் அதற்குள் ஓர் உயிர் இருந்திருக்கும். கடலில் இருந்து சேகரிக்கப்படும் இந்தச் சங்குசிப்பி என்பது ஒரு உயிரினத்தின் கூடு. சங்குசிப்பிகளை, அதில் வாழும் சிறிய உயிரினமே தனது பாதுகாப்பிற்காக உருவாக்குகிறது. நமக்கு எலும்புக் கூடு போல அவற்றுக்கு அந்தக் கூடு பாதுகாப்பு அளிக்கிறது. கால்சியம் கார்பனேட் எனப்படும் சுண்ணாம்பைக் கொண்டு இச்சங்கு சிப்பிகளை ஒவ்வொரு உயிரினமும் உருவாக்கும்.

கடலில் உயிரோடு பிடித்து வரப்படும் இச்சங்கு சிப்பிகள் கொதிக்கும் நீரை ஊற்றி அழிக்கப்படுகின்றன அலங்காரப் பொருள்களாவதற்கு! யாருக்காகவோ நாம் வாங்கும் பரிசுப் பொருள்கள் இப்படி எண்ணற்ற உயிர்களை அழித்து உருவாக்கப்படுகின்றன என்பதை உணர்வோம். உலகிலேயே உயிர்வளம் செழித்த பகுதி கடல்தான்! கடல்வளத்தைக் காக்க வேண்டியது நம் கடமை.

வினாக்கள் :

I. சங்குசிப்பி என்பது

(அ) ஒரு உயிரினம் (ஆ) ஒரு உயிரினத்தின் கூடு

(இ) கடல் (ஈ) அலங்காரப் பொருள்

II. சங்குசிப்பி எதனால் ஆனது ?

(அ) சுண்ணாம்பு (ஆ) வெற்றிலை

(இ) பாக்கு (ஈ) கால்சியம்

III. இந்தியாவின் கடைக்கோடி தென்முனையில் உள்ள ஊர்.

(அ) திருநெல்வேலி (ஆ) நெய்வேலி

(இ) திருச்சி (ஈ) கன்னியாகுமாரி

IV. எவற்றைக் கொண்டு சிப்பிகளை அழிக்கிறார்கள் ?

(அ) நீர் (ஆ) தண்ணீர்

(இ) வெந்நீர் (ஈ) நீராவி

V. உயிர்வளம் செழித்த பகுதி

(அ) கன்னியாகுமரி (ஆ) கடல்

(இ) நிலம் (ஈ) நகர்

**(அல்லது)**

(ஆ) கீழ்க்காணும் பத்தியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக : **5 × 1 = 5**

ஆசியாவில் மொத்தமுள்ள காட்டுயானைகளில் பாதிக்கும் மேற்பட்டவை தமிழகத்தில் முதுமலை, சத்தியமங்கலம், கர்நாடகாவில் நாகரஹொளே, பந்திப்பூர், கேரளாவில் முத்தங்கா உள்ளிட்ட காட்டுப் பகுதிகளில் வாழ்கின்றன. உலகிலுள்ள இரண்டு வகை யானைகளுள் ஒன்றான ஆசிய யானைகள் இயற்கையாக வாழும் பகுதிகள் இவை.

உயரமான மரங்களிலுள்ள இலைகளை யானைகள் ஒடித்துச் சாப்பிடும் போது கீழே விழும் இலை, தாவரக் கழிவுகளை இதர விலங்குகள் உண்கின்றன. காட்டு விலங்களுக்குத் தேவையான தாது உப்பைக் கொண்ட மண்ணை யானைகள் தேடிக் கண்டடைந்த பின் காட்டு எருது, மான், இதர தாவர உண்ணிகள் பயன்படுத்தும் மேலும் காடுகளில் ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் ஆண்டுக்கு 37 டன் சாணத்தைப் பரப்பி காடுகள் செழிக்க யானைகள் உதவுகின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஒரு நாளைக்குச் சராசரியாக 350 கிலோ தாவர உணவையும் சராசரியாக 200 லிட்டர் தண்ணீரையும் குடித்து வாழும் யானைகள் அவற்றைத் தேடிச் செல்லும் பாதைகள் வலசை போகும் வழித்தடங்கள் எனப்படுகின்றன. ஒரு காட்டையும் மற்றொரு காட்டையும் இவ்வழித்தடங்கள் இணைக்கின்றன. காட்டின் செழுமை யானைகளின் இப்பயணத்தால் உயிர்பெறுகின்றன. யானைகள் இல்லாத காடுகள் சிறுத்து, புதர் மண்டி இதர பாலூட்டிகளின் வாழ்க்கையைச் சிக்கலாக்கும் என்பது சூழலியலாளரின் எச்சரிக்கை.

வினாக்கள் :

I. யானை செல்லும் பாதை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) வலசை போகும் வழித்தடங்கள் (ஆ) வலசை
(இ) வழித்தடங்கள் (ஈ) தடங்கள்

II. யானைகளின் வகைகள்

(அ) 4 (ஆ) 2
(இ) 5 (ஈ) 6

III. பாலூட்டிகளின் வாழ்க்கை எப்போது சிக்கலாகும்?

(அ) காடுகள் இல்லாத போது (ஆ) காடு அழியும் போது
(இ) யானைகள் இல்லாத காடுகளால் (ஈ) வறண்ட காடுகளால்

IV. பந்திப்பூர் அமைந்த மாநிலம்

(அ) கர்நாடகா (ஆ) கேரளா
(இ) ஆந்திரா (ஈ) தமிழகம்

V. காடுகள் செழிக்க உதவுபவை

(அ) தாவரங்கள் (ஆ) தாது உப்புகள்

(இ) யானை (ஈ) யானையின் சாணம்

3. பிழை நீக்கி எழுதப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக :
(எவையேவும் 5 மட்டும்) **5 × 1 = 5**

I. இலங்கன்ரு பயமரியாது

(அ) இளங்கன்ரு பயமறியாது

(ஆ) இளங்கன்று பயமறியாது

(இ) இளங்கன்று பயமறியாது

(ஈ) இளங்கன்று பயமரியாது

II. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோரு பதம்

(அ) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

(ஆ) ஒரு பாணை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

(இ) ஒரு பானை சோற்றுக்கு ஒறு சோறு பதம்

(ஈ) ஒறு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

III. எண்ணை விளை அதிகரித்தது

(அ) எண்ணை விலை அதிகரித்தது

(ஆ) எண்ணெய் விலை அதிகரித்தது

(இ) என்னெய் விலை அதிகரித்தது

(ஈ) எண்ணெய் விளை அதிகரித்தது

IV. தமிலுக்கு நாலும் தொண்டு செய்வோம்

(அ) தமிழுக்கு நாலும் தொண்டு செய்வோம்

(ஆ) தமிலுக்கு நாளும் தொண்டு செய்வோம்

(இ) தமிழுக்கு நாளும் தொன்டு செய்வோம்

(ஈ) தமிழுக்கு நாளும் தொண்டு செய்வோம்

V. மிண்ணாற்றலின் பயனைத் தெரிந்து கொள்வோம்

(அ) மின்னாற்றலின் பயனைத் தெரிந்து கொல்வோம்

(ஆ) மின்ணாற்றலின் பயனைத் தெரிந்து கொல்வோம்

(இ) மின்னாற்றலின் பயனைத் தெரிந்து கொள்வோம்

(ஈ) மின்னாற்றலின் பயனைத் தெறிந்து கொல்வோம்

VI. இரவிள் ஆந்தை உனவு தேடும்

(அ) இரவில் ஆந்தை உணவு தேடும்

(ஆ) இறவில் ஆந்தை உணவு தேடும்

(இ) இறவில் ஆந்தை உனவு தேடும்

(ஈ) இரவிள் ஆந்தை உணவு தேடும்

4. வல்லின மெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக.

(ஐந்து மட்டும்) **5 × 1 = 5**

I. விபத்தில்லா பயணம் மேற்க்கொண்டேன்

(அ) விபத்தில்லாப் பயணம் மேற்கொண்டேன்

(ஆ) விபத்தில்லா பயணம் மேற்கொண்டேன்

(இ) விபத்தில்லா பயணம் மேற்க்கொண்டேன்

(ஈ) விபத்தில்லாப் பயணம் மேற்க்கொண்டேன்

II. உரியக் நேரத்திற்கு போய்ச் சேர்ந்தேன்

(அ) உரிய நேரத்திற்கு போய் சேர்ந்தேன்

(ஆ) உரிய நேரத்திற்குப் போய்ச் சேர்ந்தேன்

(இ) உரிய நேரத்திற்கு போய்ச் சேர்ந்தேன்

(ஈ) உரிய நேரத்திற்குப் போய் சேர்ந்தேன்

III. பாடபுத்தகத்தைப் பார்த்து தேர்வு எழுதாதே

(அ) பாடப்புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதாதே

(ஆ) பாடபுத்தகத்தை பார்த்து தேர்வு எழுதாதே

(இ) பாடப்புத்தகத்தைப் பார்த்துத் தேர்வு எழுதாதே

(ஈ) பாடப்புத்தகத்தை பார்த்துத் தேர்வு எழுதாதே

IV. நேர்மையில்லா பணி அறச்பணி ஆகாது

(அ) நேர்மையில்லா பணி அறபணி ஆகாது

(ஆ) நேர்மையில்லாப் பணி அறப்பணி ஆகாது

(இ) நேர்மையில்லா பணி அறப்பணி ஆகாது

(ஈ) நேர்மையில்லாப் பணி அறபணி ஆகாது

V. கைக்குழந்தை தாயிடம்த் தாவியது

(அ) கை குழந்தை தாயிடம் தாவியது

(ஆ) கை குழந்தைத் தாயிடம் தாவியது

(இ) கைக்குழந்தை தாயிடம் தாவியது

(ஈ) கைக்குழந்தைத் தாயிடம் தாவியது

VI. வாழ்க்கையை கற்பதுத்தான் உயர்ந்த கல்வி

(அ) வாழ்க்கையைக் கற்பதுதான் உயர்ந்த கல்வி

(ஆ) வாழ்க்கையை கற்பது தான் உயர்ந்த கல்வி

(இ) வாழ்க்கையைக் கற்பது தான் உயர்ந்தக் கல்வி

(ஈ) வாழ்க்கையை கற்பது தான் உயர்ந்தக் கல்வி

5. எடுத்துக் காட்டு எழுதுக : (ஐந்து மட்டும்) **5 × 1 = 5**

I. தொடர் வாக்கியம்

(அ) கண்ணன் திரையரங்கிற்குச் சென்றான். படம் பார்த்தான்

(ஆ) கண்ணன் திரையரங்கிற்குச் சென்றான்

(இ) கண்ணன் படம் பார்த்தான்

(ஈ) கண்ணன் திரையரங்கிற்குச் சென்றேன் என்றான்

II. செய்வினை வாக்கியம்

(அ) ஜெயா துணியைத் தைத்ததாகக் கூறினாள்

(ஆ) ஜெயா துணியைத் தைத்தாள்

(இ) ஜெயா துணியைத் தைத்தாளா?

(ஈ) ஜெயாவா துணியைத் தைத்தாள்?

III. பிறவினை வாக்கியம்

(அ) ஆசிரியர் கற்றார்

(ஆ) ஆசிரியர் கற்கவேண்டும்

(இ) ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது

(ஈ) ஆசிரியர் கற்பித்தார்

IV. எதிர்மறை வாக்கியம்

(அ) கடைக்குச் சென்று பொருள்கள் வாங்கினேன்

(ஆ) கடைக்குச் சென்று பொருள்கள் வாங்க வேண்டும்

(இ) கடைக்குச் சென்று பொருள்கள் வாங்கவில்லை

(ஈ) கடைக்குச் சென்றேன்

V. செய்தி வாக்கியம்

(அ) நீ எங்கு வசிக்கிறாய்?

(ஆ) என்னே, மலையின் உயரம்!

(இ) பாடம் படி.

(ஈ) நாளை பள்ளி விடுமுறை

VI. நேர்க்கூற்று வாக்கியம்

(அ) இன்று போய் நாளை வா

(ஆ) இன்று போய் நாளை வராதே

(இ) "இன்று போய் நாளை வா" என்றான் இராமன்

(ஈ) இராமன் இராவணனிடம் கூறினான்.

6. பின்வரும் செய்யுளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி : **5 × 1 = 5**

"மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள்
முத்தமிழே நீயுள்ளாய்! முன்னம் ஓர்நாள்
பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!
பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்நதாய்!"

I. இப்பாடலின் ஆசிரியர்

(அ) கவிமணி

(ஆ) நமக்கல்லார்

(இ) வள்ளுவர்

(ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்

II. முத்தமிழ் எவை ?

(அ) இயல் (ஆ) இசை

(இ) இயல் இசை நாடகம் (ஈ) மூன்று

III. இப்பாடலின் தலைப்பு யாது ?

(அ) சிற்பியின் கவிதை (ஆ) நிலவுப்பூ

(இ) இளந்தமிழே (ஈ) அன்னை மொழியே

IV. இப்பாடலில் இட்ம் பெற்ற வள்ளல் யார் ?

(அ) தமிழ் (ஆ) பாரி

(இ) பாண்டியர் (ஈ) தமிழர்

V. கவிதை வெறிக்கு உணவாய் அமைந்தது எது ?

(அ) தமிழ் (ஆ) கரும்பு

(இ) நெல் (ஈ) அரிசி

7. பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடையளி : **5 × 1 = 5**

சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருளாக வடிவமைத்துள்ளது. அகன் ஐந்திணைகளைப் பேசுகின்ற தொல்காப்பியம் புணர்தல், பிரிதில் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் ‘லட்சியப்’ பொருள்களோடு இணைத்துவிடுகிறது. அதுபோல், இன்னோரிடத்தில் பாவைகள் ஆசிரியம் முதற்கொண்டு நான்கு எனச் சொல்லிவிட்டுத்˙ தொடர்ந்து,

"அந்நில மருங்கின் அறமுதலாகிய
மும்முதற் பொருட்டும் உரிய என்ப"
என்று பாவகைகளோடு அறவியல் கருத்துகளை இணைத்துச் சொல்லிவிடுகிறது.

I. அகம், புறம் ஆகியவற்றைப் பாடற்பொருளாகக் கொண்டது

(அ) இலக்கியம் (ஆ) அக இலக்கியம்

(இ) புற இலக்கியம் (ஈ) சங்க இலக்கியம்

II. அறவியல் இலட்சியப் பொருள்கள்

(அ) அறம் (ஆ) பொருள்

(இ) இன்பம் (ஈ) இம்மூன்றும்

III. ஆசிரியர் முதலானவை

(அ) பாவகைகள் (ஆ) யாப்பு

(இ) அணி (ஈ) பொருள்

IV. அகத்திணை மொத்தம்

(அ) இரண்டு (ஆ) மூன்று

(இ) ஐந்து (ஈ) நான்கு

V. இப்பத்தியில் கூறப்பட்ட இலக்கண நூல்

(அ) சங்க இலக்கியம் (ஆ) தொல்காப்பியம்

(இ) நன்னூல் (ஈ) பாவகைகள்

8. வழுவற்றத் தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக **5 × 1 = 5**

I. (அ) நானும் நீயும் அங்குப் போனேன்

(ஆ) நானும் நீயும் அங்குப் போனாய்

(இ) நானும் நீயும் அங்குப் போனோம்

(ஈ) நானும் நீயும் அங்குப் போனது

II. (அ) என் வீட்டில் ஒரு பூனையொன்று இருக்கிறது

(ஆ) என் வீட்டில் பூனையொன்று இருக்கிறது

(இ) என் வீட்டில் பூனையொன்று இருக்கின்றன

(ஈ) என் வீட்டில் ஒரு பூனையொன்று இருக்கின்றன

III. *(அ)* களிறு கத்தும் ; புலி முழங்கும்

*(ஆ)* களிறு பிளிறும் ; புலி முழங்கும்

*(இ)* களிறு கத்தும் ; புலி உறுமும்

*(ஈ)* களிறு பிளிரும் ; புலி உறுமும்

IV. *(அ)* பனை இலையில் கூரை போட்டனர்

*(ஆ)* பனை இலையில் கூரை வேய்ந்தனர்

*(இ)* பனை ஓலையில் கூரை வேய்ந்தனர்

*(ஈ)* பனை இலையில் கூரை அமைந்தனர்

V. *(அ)* வானத்துல இருந்து மழ கொட்டுது

*(ஆ)* வானத்தில் இருந்து மழை கொட்டுது

*(இ)* வானத்துல இருந்து மழை பெய்கிறது

*(ஈ)* வானத்திலிருந்து மழை பெய்கிறது

பகுதி – ஆ  **மதிப்பெண் : 40**

9. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக : **2 × 3 = 6**

I. இல்வாழ்க்கை பற்றிக் குறள் கூறும் கருத்துகள் யாவை ?

II. தலைமகன் பாங்கற்கு உரைத்த அகநானூற்றுப் பாடலின் உள்ளுறையை எழுதுக.

III. எதிர்பாராத விருந்தாளிகளாக ஜலாலுத்தீன் ரூமி வருணிப்போர் யாவர் ?

IV. குளிர்கால நள்ளிரவு எவ்வாறு அமைந்தது என நக்கீரர் தம் பாடலில் கூறுகிறார்.

10. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க **3 × 4 = 12**

I. சென்னையின் தொன்மை பற்றி விளக்குக.

II. தாய்வழிக் குடும்பம் அமைந்த முறையினைத் தமிழர் குடும்ப முறை பாடத்தின் வழி நிறுவுக.

III. கலைமுழுமை எவ்வாறு தி.சு. நடராசன் அவர்களால் கூறப்படுகிறது?

IV. சென்னை நகர உருவாக்கம் பற்றி விளக்குக.

V. பேரிடர்களிலிருந்து தற்காத்துக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

11. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக : **1 × 7 = 7**

I. முதல்கல்

II. உரிமைத்தாகம்

III. முகவரி இழந்த தலைக்குளம்

12. பின்வரும் கடிதங்களில் ஒன்றினை எழுதுக **1 × 6 = 6**

அ. உனக்குப் பிடித்த திரைப்படம் குறித்து நண்பனுக்கு மடல்

(அல்லது)

ஆ. நீ வாழும் பகுதியில் கொரானா தடுப்பூசி முகாம் நடத்த மாநில சுகாதார ஆணையருக்கு விண்ணப்பம் எழுது.

இரண்டிலும் உன் முகவரி : (அ. கமலா/அ.ஸ்ரீராம், 2,வனசக்தி நகர், குளத்தூர், சென்னை -40)

13. இசைத்துறையில் சிறந்து விளங்கும் ஒருவரை நேர்காணல் செய்க. **1 × 3 = 3**

14. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக. **1 × 6 = 6**

I. அ. உனக்குக் கீழே இருப்பவர் கோடி!

II. ஆ. நீர்த்தூய்மை வாழ்வின் வளமை

III. இ. வெற்றியின் அடித்தளம் தன்னம்பிக்கை

---